**கவனிக்க.-** 2021.06.11 ஆந் திகதிய 2232 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II(ஆ), பகுதி I : தொகுதி III மற்றும் பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) மற்றும் பகுதி IV(ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான பொலநறுவை மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார்களின் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2233 - 2021 ජූනි මස 18 වැනි සිකුරාදා - 2021.06.18**

*2233 ஆம் இலக்கம் – 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - | அரசாங்க அறிவித்தல்கள் | 1134 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - | விலைக் கட்டளைகள் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1134 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1135 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - | மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, யூன் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1133 - B 082240 - 405 (2021/06)

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

### நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. டபிள்யூ. பி. சேனாதீர அவர்கள், 2020, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக அரச கரும மொழிகள் ஆணையாளர் அதிபதி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2021, யூன் 01.

06-245/1

### நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. ஜி. கே. ஜி. ஏ. ஆர். பி. கே. நந்தன அவர்கள், 2021, மாச்சு மாதம் 29 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக நுவரெலியா நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2021, யூன் 01.

06-245/2

### நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த திரு. சப்புதந்திரிகே சந்திரா ஜகத் அவர்கள், 2021, ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக முழுநேர அடிப்படையில் தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதி பதவிக்கு பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2021, யூன் 01.

06-245/3

### நியமனம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிருவாக சேவையின விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திரு. சாந்த வீரசிங்க அவர்கள், 2021, மே மாதம் 06 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக காலி நிருவாக மாவட்டத்தின் மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளைப் படி,

டபிள்யூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2021, யூன் 01.

06-245/4

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1952 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராமை யாத்திரை தொடர்பான விதிமுறைகள்

1952 ஆம் ஆண்டின் திஸ்ஸமஹாராமை யாத்திரை விதிமுறைகளுக்கு அமைய திஸ்ஸமஹாராமை பிரதேச செயலாளர் டி. எல். கே. பிரியவன்ஷ ஆகிய நான் பின்வரும் காலப்பகுதியை திஸ்ஸமஹாராமை யாத்திரை விதிமுறைகள் செல்லுபடியாகும் காலப்பகுதியாக நியமிக்கிறேன்.

2021 ஆம் ஆண்டின் பொசான் பண்டிகை, 2021, யூன் மாதம் 19 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 25 ஆந் திகதி வரையாகும். (இதில் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதியும் யூன் மாதம் 25 ஆந் திகதியும் உள்ளடங்கும்.)

டி. எல். கே. பிரியவன்ஷ,
பிரதேச செயலாளர்,
திஸ்ஸமஹாராமை.

6-362

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## மக்கள் வங்கி - லக்கி பிளாசா கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2021, ஏப்பிறல் 29 ஆந் திகதி நடைபெற்ற தமது கூட்டத்தில் கீழே காணப்படும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றோம்.*

*"2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி யொன்றாகவுள்ளதும் PV 64589 எனும் பதிவிலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் கெஸ்பேவ, ஹொன்னந்தர, குடாமடுவ வீதி, 105/ 4 ஆம் இலக்கத்தின் அதனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ளதுமான "கடப்பாட்டாளர்" கம்பெனியான விகென்சா குளோபல் (பிறைவேட்) லிமிட்டட் (இதன்கண் பயன்படுத்தப்பட்டவாறான அப்பதம் அல்லது சொல்லமைப்பு, சந்தாப்பம் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து, சொல்லப்பட்ட விசென்சா குளோபால் (பிறைவேட்) லிமிட்டட், அதன் அடுத்துறுநர்களும் சாட்டுதற்காரர்களும் என்று பொருளாதல் வேண்டும் என்பதுடன் அவர்களையும் உள்ளடக்குதலும் வேண்டும்) மற்றும் (இதனகத்துப் பின்னர் "ஈடுவைப்பவர்" எனவழைக்கப்பட்டு குறிப்பீடு செய்யப்படுபவரும்) கெஸ்பேவ, ஹொன்னந்தர, குடாமடுவ வீதி, 105/4 ஆம் இலக்கத்தைச் சேர்ந்தவருமான விஜயதிலக்க கொடகந்த ஆராச்சி என்பவர், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு தீப்தி ஆர். மெண்டிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.11.05 ஆந் திகதிய 2549 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும், 2018.01.22 ஆந் திகதிய 7324 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் அத்துடன் 2018.04.11 ஆந் திகதிய 7409 ஆம் இலக்க ஈட்டுமுறி மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதாதலால் சொல்லப்பட்ட முறிகள் மீது பத்தொன்பது மில்லியன் இருநூற்று எழுபத்தேழாயிரத்து முந்நூற்றுத் தொண்ணூற்றொரு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 19,277,391.39) மாத்திரம் கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுள்ளமுள்ளது.*

*2549 ஆம் இலக்க முறியின் மீது, 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை அறுநூற்று ஏழாயிரத்து அறுநூறு ரூபாவை (ரூ. 607,600.00) மாத்திரம் கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது.*

*2549 ஆம் இலக்க முறியின் மீது, 2021.0320 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை அறுநூற்று ஏழாயிரத்து அறுநூறு ரூபாவை (ரூ. 607,600.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 14.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து எழுநூற்று இரண்டாயிரத்து நூற்றியிருபத்தாறு ரூபா அறுபத்தைந்து சதத்தை (ரூ. 702,126.65) கொண்ட தொகையொன்றையும் மற்றும் 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை இருநூற்று அறுபதாயிரத்து நாநூறு ரூபாவை (ரூ. 260,400.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 14.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து முந்நூற்று நான்காயிரத்து முந்நூற்றறுபத்து நான்கு ரூபா நாற்பத்தொரு சதத்தை (ரூ. 304,364.41) கொண்ட தொகையொன்றையும், அத்துடன் 7324 ஆம் இலக்க முறியின் மீது, 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை தொளாயிரத்து முப்பத்தேழாயிரத்து முந்நூறு ரூபாவை (ரூ. 937,300.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 19.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து ஒரு மில்லியின் தொண்ணூற்றைந்தாயிரத்து நூற்றுத்தொண்ணூற்றெட்டு ரூபா பதிநான்கு சதத்தை (ரூ. 1,095,198.14) கொண்ட தொகையொன்றையும் மற்றும் 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஒரு மில்லியன் எண்ணூற்று தொண்ணூறாயிரம் ரூபாவை (ரூ. 1,890,000.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 19.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து இரண்டு மில்லியின் இருநூற்று எட்டாயிரத்து இருநூற்றெழுபத்து மூன்று ரூபா நாற்பத்தைந்து சதத்தை (ரூ. 2,208,273.45) கொண்ட தொகையொன்றையும் மற்றும் 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஒரு மில்லியன் எண்ணூற்று தொண்ணூறாயிரம் ரூபாவை (ரூ. 1,890,000.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 19.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து இரண்டு மில்லியன் இருநூற்று எட்டாயிரத்து இருநூற்றெழுபத்து மூன்று ரூபா நாற்பத்தைந்து சதத்தை (ரூ. 2,208,273.45) கொண்ட தொகையொன்றையும், அத்துடன் 74089 ஆம் இலக்க முறியின் மீது, 2021.03.20 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஒன்பது மில்லியன் தொளாயிரத்து தொண்ணூறாயிரம் ரூபாவை (ரூ. 9,990,000.00) கொண்ட தொகையொன்றின் மீதான ஆண்டொன்றுக்கு 24.0% மேலதிக வட்டியுடன் சேர்த்து பன்னிரண்டு மில்லியன் எழுநூற்று ஐம்பத்தொன்பதாயிரத்து நூற்றைம்பத்தைந்து ரூபா இருபத்தெட்டு சதத்தை (ரூ. 12,759,155.28) கொண்ட தொகையொன்றையும், செலவுத் தொகைகளையும் வேறு விற்பனை, இறுப்பனவுகளையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட ஈட்டுமுறிகளினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உரிமம்பெற்ற ஏலதாரர் திருமதி ஈ. எஸ். ராமநாயக்க என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச்*

சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.".

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளேயின் பல்லேபத்துவில் கெஸ்பேவ நகர சபை எல்லைகளினுள் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் இல. 585ஏ, ஹொானந்தர தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள்ளும் வருகின்ற ஹொான்னந்தரவில் அமைந்துள்ளதும், "மூனமல்கஹவத்த" என அழைக்கப்படுகின்றதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நாணயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1986.09.08 ஆந் திகதிய 2615 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், "காணித்துண்டு 2" என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டு 2" பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : அம்பலம லங்கா கனத்த ; கிழக்கு : காணித்தண்டு 3 ; தெற்கு : காணித்துண்டு A (வீதிக்காக ஒதுக்கப்பட்டது) - 20 அடி அகலம்) ; மேற்கு : காணித்துண்டு 1 ; பரப்பளவில் இது, கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதன் மேலுள்ள எல்லாவற்றையும் சேர்த்து பதினொன்று தசம் ஐந்து பேர்ச்சுக்களை (00ஏ. 00றூ. 11.5பே.) கொண்டுள்ளதுடன் தெல்கந்த-நுகேகொட காணிப்பதிவகத்தில் C 1002/ 32 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பின்வரும் காணித்துண்டுகள் மீதும் அவற்றுக்கூடாகவும் பாதை வழியுரிமையும் வேறு பொதுவான உரிமைகளையும் சேர்ந்தது ;

மேற்சொல்லப்பட்ட ஹொான்னந்தரவில் அமைந்துள்ள ''மூனமல்கஹவத்த'' எனவழைக்கப்படும் காணியின் சொல்லப்பட்ட வரைபட இல. 2615 இல் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டு A (வீதிக்காக ஒதுக்கப்பட்டது) என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித் துண்டு A'' பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : காணித்துண்டுகள் 1, 2, 3, 13, 14, 15, 16, 17 மற்றும் மூனமல்கஹவத்த ; கிழக்கு : காணித்துண்டுகள் 4, 8. 6, 10, 11, 15 மற்றும் மூனமல்கஹவத்த ; தெற்கு : காணித்துண்டுகள் 8, 7C, 18, 24, D25, 26 மற்றும் 27 ; மேற்கு : காணித்துண்டுகள் 7, 9, 12, 14 மற்றும் 20 அடி அகல வீதி ; பரப்ளவில் இது, ஒரு றூட் பதின்மூன்று தசம் இரண்டு சைபர் பேர்ச்சுக்களை (00ஏ. 01றூ. 13.20பே.) கொண்டுள்ளது.

மேற்சொல்லப்பட்ட ஹொான்னந்தரவில் அமைந்துள்ள "அம்பலம கனத்த" எனவழைக்கப்படும் காணியின் டீ. ஜே. நாணயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட சொல்லப்பட்ட வரைபட இல. 2616 இல் குறித்துக்காட்டப்பட்டதும் ''காணித்துண்டு A'' என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டு A" பின்வரும் எல்லைகளையுடையது- வடக்கு : கே. தேமிஸ் என்பவரினால் உரிமை கோரப்பட்ட அம்பலம லங்கா கனத்த ; கிழக்கு : மூனமல்கஹவத்த ; தெற்கு : காணித்துண்டுகள் 45, 53 மற்றும் 1 ; மேற்கு : வீதி, பரப்பளவில் இது, பதினைந்து பேர்ச்சுக்களை (00ஏ. 00றூ. 15பே.) கொண்டுள்ளது.

2. மேற்சொல்லப்பட்ட ஹொான்னந்தரவில் அமைந்துள்ளதும், ''மூனமல்கஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நில அளவையாளர் எச். லால் குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.03.15 ஆந் திகதிய 4149 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், "காணித்துண்டு 2" என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டு 2'' பின்வரும் எல்லைகளை யுடையது- வடக்கு : அதன் காணித்துண்டு 1 ; கிழக்கு : அதன் காணித்துண்டு 7 (12 அடி வீதிக்காக ஒதுக்கப்பட்டது) மற்றும் காணித்துண்டு 3 ; தெற்கு : ஜயக்கொடி என்பவரினால் உரிமை கோரப்பட்ட ஆதனம் ; மேற்கு : நோமிஸ் அப்புஹாமி என்பவரினால் உரிமை கோரப்பட்ட மூனமல்கஹவத்த ; பரப்பளவில் இது, பத்து பேர்ச்சுக்களை (00ஏ. 00றூ. 10பே.) கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட 4149 ஆம் இலக்க வரைபடத்துக்கிணங்க தெல்கந்த-நுகேகொட காணிப்பதிவகத்தில் C 1002/ 35 இல் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பின்வரும் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட பாதை வழியுரிமையுடன் சேர்ந்தது ;

மேற்சொல்லப்பட்ட ஹொான்னந்தரவில் அமைந்துள்ள "மூனமல்கஹவத்த" எனவழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். லால் குணசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.03.15 ஆந் திகதிய 4149 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் "காணித்துண்டு 7" (12 அடி வீதிக்கும் திருப்புவதற்குமான சுற்றுவட்டத்துக்குமாக ஒதுக்கப்பட்டது) என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட "காணித்துண்டு 7" பின்வரும் எல்லைகளை யுடையது- வடக்கு : சித்தி அப்பு என்பவரினால் உரிமை கோரப்பட்ட மூனமல்கஹவத்த ; கிழக்கு : வீதி மற்றும் அதன் காணித்துண்டுகள் 3 மற்றும் 4 ; தெற்கு : அதன் காணித்துண்டுகள் 5, 4, 3 மற்றும் 2 ; மேற்கு : அதன் காணித்துண்டுகள் 2 மற்றும் 1; சொல்லப்பட்ட 4149 ஆம் இலக்க வரைபடத்துக்கிணங்க பரப்பளவில் இது, ஒன்பது பேர்ச்சுக்களை (00ஏ. 00றூ. 9பே.) கொண்டுள்ளது.

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய அலுவலகம்
(கொழும்பு தெற்கு).

06-350